செ.வெ.எண்:40 நாள்: 26.01.2017.

**நாகப்பட்டினம் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 68-வது குடியரசு தின விழாவில்**
**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சு.பழனிசாமி,இ.ஆ.ப., அவர்கள்**
**தேசிய கொடியை ஏற்றி வைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு சுதந்திர போராட்ட தியாகிகளை கௌரவித்து**
**169 பயனாளிகளுக்கு ரூ.75 இலட்சத்து 30 ஆயிரத்து 825 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

நாகப்பட்டினம் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் 26.01.2017 அன்று நடைபெற்ற 68-வது குடியரசு தின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சு. பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தி, காவல்துறை, ஊர்காவல் படை, தேசிய மாணவர் படை, சாரணியர் ஆகியோரது அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சு. பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள், 14 சுதந்திர போராட்ட தியாகிகள், 5 மொழிப்போர் தியாகிகள் ஆகியோர்களுக்கு சால்வை அணிவித்து கௌரவித்தார். காவல்துறையில் சிறப்பாகப் பணிபுரிந்த ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், தலைமை காவலர்கள், அலுவலர்கள் உள்ளிட்ட 40 பேருக்கு பாராட்டுச் சான்றிதழையும், தலைமை காவலர்கள் 15 பேருக்கு 2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கமும், வீரதீர செயல் புரிந்தமைக்காக சீர்காழி உதவி தொடக்கக் கல்வி அலுவலர் திருமதி.ஜரின் ஜெயராணிக்கு பாராட்டுச் சான்றிதழையும்,

வருவாய் துறையில் 20 ஆண்டுகள் பணிமுடித்து தண்டனைகள் ஏதும் பெறாமல் அரசுப் பணியினை சிறப்பாக ஆற்றிவரும் 12 அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும், கல்வித்துறையில் சிறப்பாகப் பணிபுரிந்தமைக்காக 2016 ஆம் ஆண்டு தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற தலைமையாசிரியர்கள் 2 பேருக்கு பாராட்டுச் சான்றிதழும், திருக்கண்ணபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, இராசன்கட்டளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, திருவெண்காடு ஸ்ரீமெய்கண்டார் உதவிபெறும் தொடக்கப்பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு 2015-16 ஆம் ஆண்டு சிறந்த பள்ளிக்கான கேடயங்களும், 2014-15 ஆம் கல்வி ஆண்டிற்கு தமிழக முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடுதலில் அம்பல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, சட்டநாதபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வலிவலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, கீச்சாங்குளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு பரிசுகளும், 2016-17 ம் ஆண்டு பேரிடர் மேலாண்மை குறித்த பேச்சுப்போட்டியில் மாநில அளவில் முதலிடம் பெற்ற 1 மாணவிக்கு பாராட்டுச் சான்றிதழும், தேசிய அளவில் விருது பெற்ற திருக்கண்ணபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆசிரியர் மற்றும் 3 மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையில் சிறப்பாகப் பணிபுரிந்தமைக்காக 1 அலுவலருக்கு நற்சான்றிதழும், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் மூலம் சிறப்பாக பணியாற்றியதற்காக 6 நபர்களுக்கு பாராட்டுச் சான்றிதழும், சுகாதாரத்துறையில் சிறப்பாக பணியாற்றியமைக்காக அலுவலர் மற்றும் ஊழியர்கள் 11 பேருக்கு பாராட்டுச் சான்றிதழும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படும் அங்கன்வாடி பணியாளர்கள் 3 நபர்களுக்கு மாநில அளவிலான விருதுகளாக தலா ரூ. 5 ஆயிரம் வீதம் ரூ. 15 ஆயிரம் மதிப்பீட்டிலும், 20 ஆண்டுகள் அப்பழுக்கற்று சிறப்பாக பணிபுரிந்தமைக்காக 1 காவலருக்கு நற்சான்றிதழும், மாவட்ட தொழில் மையம் மூலமாக ஊட்டி தேயிலைத் தூளினை அதிக அளவில் விற்பனை செய்த நியாய விலைக்கடை விற்பனையாளர்கள் 3 பேருக்கு ரூ.6000 மதிப்பிலான ஊக்கத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும், மருத்துவப் பணிகள்(தொழுநோய்) துறையில் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக 2 பேருக்கு பாராட்டுச் சான்றிதழும்,

முன்னாள் படைவீரர் நலத்துறையின் வருடாந்திர பராமரிப்பு மான்யமாக தலா ரு.25 ஆயிரம் வீதம் 3 நபர்களுக்கு ரு. 75ஆயிரத்துக்கும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 2 நபர்களுக்கு தலா ரூ 5350 வீதம் ரூ.10,700 மதிப்பிலான மடக்கு சக்கர நாற்காலிகள் மற்றும் 1 பயனாளிக்கு 4 கிராம் தங்கம் உட்பட ரூ.25,000 மதிப்பில் திருமண உதவித் தொகை என மொத்தம் ரூ.35,700 மதிப்பீட்டிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.3465 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறை சார்பாக 1 பயனாளிக்கு ரூ.4650 மதிப்பிலான சலவைப்பெட்டியும்,

வேளாண்மைத்துறையின் சார்பில் ரூ.75 ஆயிரம் மான்யத்திலான பவர்டில்லர் 4 பயனாளிகளுக்கும், ரூ. 1 லட்சம் மான்யத்திலான டிராக்டர் 4 பயனாளிக்கும், ரூ. 14,700 மான்யத்திலான நுண்ணீர்ப் பாசனக் கருவி 2 பயனாளிகளுக்கும் என ரூ.7லட்சத்து 29 ஆயிரத்து 400 மதிப்பிலும், கூட்டுறவுத் துறையின் சார்பில் சுழல் நிதியாக தலா ரூ.1,00,000 வீதம் 8 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், ரூ.50,000 1 மகளிர் சுய உதவிக் குழுவிற்கும், ரூ.30,000 1 மகளிர் சுய உதவிக் குழுவிற்கும் என மொத்தம் ரூ.8 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பிலும்,

மாவட்ட தொழில் மையம் மூலமாக தொழில் தொடங்க கடனுதவியாக 5 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.32 லட்சம் மதிப்பீட்டிலும், தோட்டக்கலைத் துறையின் சார்பில் தலா ரூ.19,600 வீதம் 2 பயனாளிகளுக்கு ரூ.39,200 மதிப்பீட்டில் தெளிப்புநீர் பாசன கருவிகள் என, மொத்தம் 169 பயனாளிகளுக்கு ரூ. 75 இலட்சத்து 30 ஆயிரத்து 825 மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சு. பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

நாகப்பட்டினம் இ.ஜி.எஸ். பிள்ளை கலை அறிவியல் கல்லூரி, செம்பனார்கோவில் கலைமகள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, குத்தாலம் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி, நாகப்பட்டினம் நேரு மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, நாகூர் கிரசன்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, வேதாரண்யம்-குரவப்புலம் பாயிண்ட் காலிமர் பன்னாட்டு பள்ளி, திருமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளிட்ட பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் சாகச நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

முன்னதாக திரு.ரவீந்திரன்(ஆயுதப்படை ஆய்வாளர்) தலைமையில் காவல்துறையினர் அணிவகுத்துச் சென்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சு.பழனிசாமி,இ.ஆ.ப., அவர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் திரு,எம்.தமிமுன் அன்சாரி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.மா.துரை,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் திரு.சி.கண்ணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மீ.செல்வகுமார், ஊர்காவல் படை தளபதி திரு.ஆனந்தன், வட்டாட்சியர் திரு.தமிம்அன்சாரி, அரசு அலுவலர்கள், பொதுமக்கள், பள்ளி மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு :-**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**